IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No. 453/2019

சாட்சி : DW1

பெயர் : கார்த்திகேயன் தேதி: 06-04-2024

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

நான் ஏற்கனவே 436 பி, பென்னாகரம் ரோடு, விஜயன் நகர், தருமபுரியில் குடியிருந்தேன் என்றால் ஆமாம். வா.த.சா.ஆ-A6 நான் கிரயம் பெற்ற கிரய பத்திரம் என்றால் ஆமாம். வா.த.சா.ஆ-A1 ல் முதலில் உள்ள கையெழுத்து என்னுடையது. இரண்டாவதாக உள்ள கையெழுத்து என் மனைவியுடையது என்றால் ஆமாம். வா.த.சா-2 என்னுடைய உறவினர் என்றால் ஆமாம். வா.த.சா.ஆ-A1 இரண்டாவது சாட்சியாக கையெழுத்து போட்டுள்ள கதிர்வேல் என்னுடைய நண்பர் என்றால் சரியல்ல. வாதி என்னுடைய உறவினர் அல்ல என்றால் ஆமாம். வா.த.சா.ஆ-A3 மற்றும் வா.த.சா.ஆ-A4 நான் வேண்டும் என்று வாங்காமல் திருப்பி அனுப்பி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எதிர் வழக்குரையில் நோட்டீஸ் அனுப்பிய நபர் யார் என்று தெரிந்ததால் தான் நான் வாங்காமல் திருப்பி அனுப்பி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ-A3 மற்றும் வா.த.சா.ஆ-A4 ல் வாதி பெயர் இல்லை என்றும், அதை வாதி தான் அனுப்பினார் என்று எனக்கு எவ்வாறு தெரிய வந்தது என்றால் அது வாதி அனுப்பினார் என்று எனக்கு தெரியாது. நரேஷ் என்பவர் என்னுடைய மைத்துனர். அவர் கேட்டர் பில்லர் என்ற நிறுவனத்தில் பொறியாளராக பணியாற்றி மாதம் 1 லட்சம் சம்பளம் வாங்கி வந்தார் என்றால் ஆமாம். 2017 ம் வருடம் திருப்பத்தூர் பாண்டியன் பாலிடெக்னிக் கல்லூரியில் விரிவுரையாளராக பணியாற்றி மாதம் ரூ. 15,000/- சம்பளம் வாங்கி வந்தேன் என்று சொன்னால்

சரியல்ல. நரேஷ் ரூ. 1 லட்சம் சம்பளம் வாங்கி வந்ததால், அவர் வாதியிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நரேஷ் தற்கொலை செய்து கொண்டார் என்பது சம்மந்தமான ஆவணங்கள் இந்த வழக்கில் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வா.த.சா.ஆ–A6 சொத்தில் கண்ட வீட்டை நரேஷ் என்பவர் செலவு செய்து எனக்கு கட்டி கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. 2016 ல் எனக்கு விபத்து நடந்து மியாட் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்று சொன்னால் ஆமாம். அப்போது நான் 6 மாதம் வேலைக்கு செல்லவில்லை என்றால் ஆமாம். அந்த சமயத்தில் என்னுடைய சிகிச்சைக்காக என்னுடைய குடும்ப செலவிற்காகவும் என்னுடைய தகப்பனார் வீட்டை விற்று பணம் தருவதாக கூறியதால் வாதியிடம் கடன் வாங்கினேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி மோசடியாக ஆவணங்கள் தயார் செய்து வழக்கு போட்டதாக, அவர் மீது இதுநாள் வரை சட்ட ரீதியான நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றால் ஆமாம். வாதியிடம் கடன் வாங்கிக் கொண்டு தாவா கடன் ஒப்பந்தம் எழுதிக் கொடுத்துவிட்டு தற்போது பொய் வழக்காடி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ–A1 பத்திரம் என் பெயரில் வாங்கப்பட்டது என்றால் ஆமாம். எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/– A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.